ඉඩම් පරිහරණ ප්‍රතිපත්ති සැලසුම් දෙපාර්තමේන්තුව
**காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்**
Land Use Policy Planning Department

# 2025

කාර්ය සාධන වාර්තාව
**செயற்திறன் அறிக்கை**
# Performance Report

**உள்ளடக்கம் பக்க இல.**

**01.நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு** ......................................01

*1.1 அறிமுகம்*.............................................................................................01

*1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு,செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்* 02

*1.3. பிரதான செயற்பாடுகள்*.....................................................................03-06

*1.4. நிறுவனக் கட்டமைப்பு*.......................................................................07-08

*1.5. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்*...................................................07

*1.6. திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனத்டனான நிதியங்கள்*..........................07

*1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களின் தகவல்கள்* ...............07

**02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்** ....................................09-13

**03 – 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை**

*3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று* ..............................................................14

3.2 *நிதி நிலைமை பற்றிய கூற்று* ....................................................................15

3.3 *காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று* .................................................................16

3.4 *நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்* ..........................................................17

3.5 *வருமான சேகரிப்பு செயலாற்றுகை*...........................................................18

3.6 *ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை*................................................18

3.7 *நி.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக* இத்திணைக்களத்திடம் அளிக்கப்பட்ட *ஒதுக்கீடுகள்*...............19

3.8 *நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை*...............................19

3.9 *கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை* .....................................................19

**அத்தியாயம் 04. செயலாற்றுகை குறிகாட்டிகள் ( செயற்றிட்டத்தின் அடிப்படையில்) ..........20-22**

*நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் செயற்றிட்டத்தின் அடிப்படையில்..........*

**அத்தியாயம் 05. நிலைபேறான அபிவிருத்திக் இலக்குகளைப் (SDG)............... பூர்த்தி செய்யும் செயலாற்றுகை..........**

*5.1அடையாளம் காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்*23-26

*5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் அடைவுகள் மற்றும்சவால்கள் ..........*26-27

**அத்தியாயம் 06 - மனித வள விவரக்குறிப்பு ..........**

*6.1 மனித வள முகாமைத்துவம்..........*27

6.2 *நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப்பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பது தொடர்பாக.* ...............27

*6.3 மனித வள திறன் விருத்தி..........*28-30

**அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை ..........**31-42

# 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# நிறுவனத்தின் பெயர்: காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
# செலவினத் தலைப்பு: இல. 327

## அத்தியாயம் 01. நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம்

இலங்கைக்கான தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கையை தயாரிப்பதற்கும் அங்கீகரிப்பதற்கும் மற்றும் அறிவியல் ரீதியிலான காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலை அறிமுகப்படுத்தும் நோக்கில் 1983 ஆம் ஆண்டில் காணி அமைச்சின் கீழ் இயங்கிய காணி உபயோகக் கொள்கை திட்டமிடல் பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1654/21 மற்றும் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி மூலம் காணி உபயோகக் கொள்கை திட்டமிடல் திணைக்களமாக தாபிக்கப்பட்டது.

தற்போது இந்த திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 673 ஆகும். தேசிய மட்டத்தில் திணைக்களத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து இயக்குவது மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியன பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. நிர்வாக நடவடிக்கைகள் பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் உதவி /பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆகியோராலும் மற்றும் கணக்கியல் நடவடிக்கைகள் பிரதான கணக்காளர் மற்றும் கணக்காளரினாலும் நிர்வகிக்கப்படுகின்றன. கிராமிய மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் நடவடிக்கைகள் வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் தொழில்நுட்ப கடமைப்பொறுப்புகள் காணி பயன்பாட்டு திட்டமிடல், பயிராக்கவியல், விவசாயப் பொருளியல், சமூகவியல் மற்றும் தகவல்தொடர்பு முறைமை ஆகிய விடயங்களின் கீழ் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்படுகிறது.

திணைக்களத்தின் செயற்பாடுகளை மாவட்ட மட்டத்தில் செயற்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்ட செயலகத்துடன் இணைந்ததாக மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் செயற்பாடுகளை மேற்பார்வையிட உதவிப் பணிப்பாளர்கள் (மாவட்ட காணிப் பயன்பாடு) நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து காணி பயன்பாட்டு திட்டமிடல் நடவடிக்கைகளை களத்தில், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்கள் /அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

### 1.2. தொலைநோக்கு

“இலங்கையின் நிலவளங்களை மிகச்சிறப்பாகவும் வளங்குன்றாத நிலையிலும் முகாமைத்துவம் செய்தல்”.

### செயற்பணி

சூழல் சமநிலையைப் பேணி, நிலையான மற்றும் உகந்த முறையில் நிலத்தைப் பயன்படுத்துவதற்கான கொள்கை வகுத்தல் மற்றும் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

### குறிக்கோள்கள்

2010 ஆம் ஆண்டின் விசேட வர்த்தமானி அறிவித்தல் இல.1654/21 மூலம் பின்வரும் நோக்கங்களின் கீழ் விடயங்களை ஒழுங்கமைக்கும் பொறுப்பை காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1. இலங்கைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய காணி பயண்பாட்டு கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டப் பின்னணியை உருவாக்கல்.
2. இலங்கைக்கான தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.
3. மட்டுப்படுத்தப்பட்ட வளமான நிலவளத்தை, மனித மேம்பாட்டிற்காகவும், சுற்றாடல் சமநிலையை பேணும் வகையிலும் பயன்படுத்தக் கூடியவாறு பொருத்தமான தொழில் நுட்ப வழிகாட்டல்களை மேற்கொள்ளுதல்.
4. நிலத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின்போது நிலவளத்தின் பாதுகாப்பும் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையும் உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான சிபாரிசுகளை வழங்குதல்.
5. அறிவியல் ரீதியிலான காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்பில் அறிவு, பயிற்சி மற்றும் கல்விப் பணிகள் விஸ்தரிக்கும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

### 1.3. காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

மேற்கூறிய உபஇலக்கம் 1:2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்காக 2021.02.16 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2215/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகளைக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

- இலங்கைக்கான தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கையை தயாரித்தல் மற்றும் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப அதனைத் திருத்தம் செய்தல்.
- பல்வேறு மட்டங்களில் காணிப் பயன்பாட்டு பரிந்துரைகள் உள்ளடக்கிய காணிப் பயன்பாட்டு திட்டங்களை தயாரித்தல் மற்றும் அந்தப் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட பங்குதாரர் நிறுவனங்களைக் கண்டறிந்து உரிய ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளுதல்.

அபிவிருத்தித் தேவைகளைக் கருத்தில் கொண்டு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலானது இரண்டு முக்கியமான பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

**பாரிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயற்பாடுகள்**

இந்த மட்டத்தில் மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன்படி, காணிப் பயன்பாட்டு திட்டங்களில் நடைமுறைத் தேவைகளையும், நடைமுறைப்படுத்துவதில் இலகு தன்மையும் கருத்திற்கொண்டு நகர அதிகாரப் பகுதியல்லாத ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் காலத்திற்கு ஏற்ற வகையில் அவற்றை இற்றைப்படுத்துவதற்காக முன்னுரிமை வழங்கப்பட்டது.

**நுண்மட்டத்தில் (Macro level) மேற்கொள்ளப்படும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயற்பாடுகள்**

இதன்கீழ் பங்கேற்பு அணுகுமுறையின் ஊடாக நுண் நீரேந்து பிரதேசங்களுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல், தெரிவு செய்யப்பட்ட கிராமிய பிரதேசங்களின் பொருட்டு காணி பயன்பாட்டு திட்டங்களைத் தயாரித்து, அந்த திட்டங்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் தரமிழந்த விவசாய நிலங்களை புனரமைப்பதற்காக திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் காணி பயன்பாட்டு திட்டமிடல் நடவடிக்கைகள்

- காணிப் பயன்பாட்டை முறைசார்படுத்துவதற்கு, தீர்மானம் எடுப்பதற்கான வசதிக்காக தொழில்நுட்ப பரிந்துரைகளை வழங்குதல்.
- பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுக்காக பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க நிலங்களுக்கான நிலப் பொருத்தப்பாடு அறிக்கைகளை வழங்குதல்.
- இற்றைப்படுத்தப்பட்ட காணிப் பயன்பாட்டு தகவல் அமைப்பை நிறுவி, அதனைப் பராமரித்தல்.
- பயன்படுத்த முடியுமான போதிலும், ஆயினும் பயன்படுத்தாத மற்றும் குறைந்த பயன்பாட்டில் உள்ள காணிகளின் பிரச்சனைகளைக் கண்டறிந்து, அந்தக் காணிகளை சிறந்த உற்பத்தித் திறனுடன் பயன்படுதுவதற்காக வழிமுறைகளை செயல்படுத்துதல்.
- நில வளங்களின் அதிகபட்ச உற்பத்தித் திறன் பொருட்டு திட்டமிடலின்போது, தேவையான தரவுகளை சேகரிக்க உதவும் பல்வேறு மட்டத்திலான ஆய்வுகளை நடாத்துதல் (உதா. தேசிய காணிப் பயன்பாட்டு ஆய்வு / காணி உரிமை மற்றும் பயன்கொள்ளுதல் தொடர்பான ஆய்வு / நீர் மூலங்களை அடையாளம் காண்பது குறித்த ஆய்வு).
- மாவட்ட மற்றும் பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக்களை ஒருங்கிணைத்தல்.
- அறிவியல் ரீதியான காணிப் பயன்பாடு குறித்து பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள பல்வேறு குழுக்களை அறிவுறுத்தல்.

மேற்கூறிய பணிகளை மேற்கொள்ளும்போது, இத்திணைக்களம் முக்கியமாக காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு உட்பட பல முதன்மையான அரச நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்றது.

காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் என்பது பல்துறை விடயம் சார்ந்ததாக இருப்பதால், ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம் ஏனைய இணை நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவது எப்போதும் சாத்தியமாகும்.

பின்வரும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் பல்வேறு மட்டங்களிலும் வெவ்வேறு சூழல்களிலும் திணைக்களத்தின் செயல்பாடுகளுடன் தொடர்பு கொள்கின்றன. அதேபோல் இந்தத்

திணைக்களத்தின் தரவுகள், தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகியவை அந்த நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையானது, பல்வேறு மட்டங்களில் திட்டமிடல்களில் உள்ள பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கும், நிலவள முகாமைத்துவத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் திணைக்களத்திற்கு உதவுகிறது.

| | நிறுவனம் | திணைக்களத்தின் செயற்பாடுகளுடனுள்ள தொடர்பு |
|---|---|---|
| 01. | விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு | திணைக்களத்தின் செயற்பாடுகள், கொள்கைகள் மற்றும் தற்போதுள்ள சட்ட விதிகளின் அடிப்படையில் அமைச்சினால் நெறிப்படுத்தப்பட்டு வழிநடத்தால் |
| 02. | சுற்றாடல் அமைச்சு | தேசிய மட்டத்தில் சுற்றாடல் பாதுகாப்பு குழுவின் உறுப்பினர் உரிமை/ அமைச்சின் பல்வேறு கருத்திட்டங்களுடன் தொடர்பு கொள்ளுதல், (உதா. நிலம் தரமிழத்தலை குறைக்கும் திட்டங்கள், சுற்றுச்சூழல் உணர்திறனுள்ள பிரதேசேங்களை இலங்கை பொருட்டு அளவுமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்) |
| 03. | காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் | காணி பயன்பாட்டு திட்டமிடல் நடவடிக்கைகளை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் மாவட்ட/பிரதேச காணிப் பயன்பாட்டு குழுக்களை நடாத்தல் |
| 04. | மாவட்ட செயலகம் /பிரதேச செயலகம் | மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல் மற்றும் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டங்கள் நடாத்துதல் |
| 05. | தேசிய பௌதீக | வலையத் திட்டக் குழுவில் |

| | | |
|---|---|---|
| | திட்டமிடல் திணைக்களம் | பிரதிநிதித்துவம் மற்றும் தகவல்களை வழங்கல் |
| 06. | நகர அபிவிருத்தி அதிகாரசபை | நகர்ப்புற பகுதிகளுக்கான வலயத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான தரவு மற்றும் தகவல்களை வழங்குதல். |
| 07. | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | பெருந்தோட்ட பயிர் செய்கைகள் அடங்கலான பிரதேசங்களை வரைப்படமாக்குவதன் ஊடாக பிரதான பெருந்தோட்ட பயிர்ச் செய்கை காணிகளை நன்கு முகாமைத்துவம் செய்வதற்கு பங்களிப்பு வழங்குதல். |
| 08. | விவசாயத் திணைக்களம் | விவசாய காணி வளங்களின் முகாமைத்துவத்திற்காக திட்டமிடலின் போது தேவைப்படும் காணி பயன்பாட்டு வரைப்படங்கள் மற்றும் தரவுகளை வழங்குதல் |
| 09. | காணி சீர்திருத்த ஆணைக்குழு | காணி பொருத்தப்பாட்டு அறிக்கைகள் மற்றும் கருத்திட்டங்களை மதிப்பிடல், தொழில்நுட்ப குழுவில் பிரதிநிதித்துவம் செய்தல். |
| 10. | வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு | பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் வனப் பகுதிகளின் எல்லைகளைக் கண்டறிதல், வரைபடமாக்கல் மற்றும் காணிப் பயன்பாட்டு இடஞ்சார்ந்த தரவுகளைப் பரிமாற்றுதல். |
| 11. | நீர்ப்பாசனத் திணைக்களம் | ஆற்றுப் படுகைகளை நிலைபேண் தன்மையுடன் முகாமைத்துவம் செய்வதற்காக இற்றைப்படுத்தப்பட்ட காணிப் பயன்பாட்டுத் தரவுகள் மற்றும் நீர் மூலங்களின் தரவு மற்றும் தகவல்களை வழங்குதல். |

## 1.4. நிறுவனக் கட்டமைப்பு

காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் ஒரு A தரமுடையதும், அங்கீகரிக்கப்பட்ட 673 பதவியணியைக் கொண்டுள்ள திணைக்களம் ஆகும். காணி விடயத்தைப் பொறுப்பாக கொண்டுள்ள அமைச்சின் கீழ் இந்த திணைக்களம் இயங்கி வருவதுடன், நிறுவனத்தின் தலைமை அலுவலகம், நிருவாகம், கணக்குகள், அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், உள்ளக கணக்காய்வு ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. திணைக்களத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், தலைமை அலுவலகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப வழிகாட்டலுடன் 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இத் திணைக்களத்தால் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிறுவன கட்டமைப்பு 5 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## 1.5. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

(1) நிர்வாகப் பிரிவு

(2) கணக்குப் பிரிவு

(3) அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு (மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்கள் அடங்கலாக)

(4) உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## 1.6. திணைக்களத்தின் கீழுள்ள நிறுவன நிதியங்கள்

ஏற்புடையதாகாது

## 1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

ஏற்புடையதாகாது

# நிறுவனக் கட்டமைப்பு - காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்



## அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

## குறிப்பிடத்தக்க அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### சவால்கள்

- காணிப் பயன்பாட்டு திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு முறையான சட்டக் கட்டமைப்பு இல்லாமை மற்றும் அதன் காரணமாக தற்போது தயாரிக்கப்பட்டுள்ள காணி பயன்பாட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டப் பின்னணி இல்லாமை.
- பல்வேறு மட்டங்களில் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளுடன் நடைமுறைப்படுத்தல்.

### எதிர்கால இலக்குகள்

- திருத்தம் செய்யப்பட்ட தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கைக்கு அனுமதி பெற்றுக்கொள்ளல்
- நாட்டில் வரையறுக்கப்பட்ட நில வளங்களை உகந்த முறையில் நிர்வகிப்பதன் மூலம் நிலையான காணிப் பயன்பாட்டை நிறுவும் நோக்கத்திற்காக தேசிய காணிப் பயன்பாட்டுச் சட்டத்திற்கான அனுமதியைப் பெறுதல்.
- எதிர்கால அபிவிருத்தி தேவைகளை கருத்திற் கொண்டு பல்வேறு மட்டங்களில் காணிப் பயன்பாட்டு திட்டங்களை தயாரித்தல்.
- காணிப் பயன்பாடு / நிலப் போர்வை தரவுகளை இற்றைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தித் தேவைகளுக்காகக் கோரும் தரப்பினருக்கு அந்தத் தரவு / தகவல்களை வழங்குதல்.
- நிலையான நில முகாமைத்துவம் தொடர்பாக பல்வேறு மட்டங்களில் அறிவுறுத்தல்களை மேற்கொண்டு நில முகாமைத்துவத்தை முறைசார்படுத்தல்.
- காலநிலை மாற்றங்களை எதிர்நோக்குவதற்காக தற்போது காணப்படும் விவசாய காணிப் பயன்பாட்டில் உள்ள வினைத்திறமையின்மைகள், குறைப் பயன்பாடுகள் மற்றும்

நிலத்தின் தரம் குறைதலை முகாமைத்துவம் செய்வதற்கு முடியுமாதல் மற்றும் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விவசாய நில பயன்பாட்டுடன் கூடிய காணிகளுக்கு விவசாய பயிர்ச் செய்கை முகாமைத்துவ முறைமை வகையீடு (Farming System Classification) தயாரித்தல்.

- நீர் வளங்களின் இயல்பு மற்றும் போஷாக்கு தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டு உப நீர் நிலைகளின் சுற்றாடல் முறைமைகளில் நிலைபேண்தகு தன்மையை உறுதிப்படுத்தியும், அவற்றின் நிலப் பயன்பாடுகளை முறையான நில முகாமைத்துவம் மீது ஈடுபடுத்துவதற்கு இயன்ற வகையிலும், தெரிவு செய்யப்பட்ட உப நீர் நிலைகள் பொருட்டு (Sub River Basin) காணிப் பயன்பாட்டு முகாமைத்துவ திட்டங்களைத் தயாரித்தல்.
- பயன்படுத்தப்படாத மற்றும் குறைந்த பயன்பாட்டிலுள்ள நிலங்களைக் கண்டறிந்து, அவற்றை உகந்த காணிப் பயன்பாட்டுக்கு வழிநடாத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

- **முன்னேற்றம்**

| | வருடாந்த செயற்திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் | மதிப்பிடப்பட்ட வருடாந்த செலவு (ரூபா. மில்) | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | பௌதீக முன்னேற்றம் % | | பௌதீக முன்னேற்றம் % |
| | | | வெளியீடு | சதவீதம்% | |
| 01 | காணிப் பயன்பாட்டுத் தரவுகளைச் சேகரித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் தரவு பரிமாற்றம் அத்துடன் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல். | 2.526 | விவசாயச் செய்கை முகாமைத்துவ முறைமை வகைப்படுத்தல்<br><br>நிலப்பயன்பாடு / நிலப்போர்வை வகைப்படுத்தல் சுட்டெண் - இலங்கைக்கான பதிவேடு / ஆவணம் தயாரிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br><br>திணைக்களத்திற்கான 2026 – 2030 ஐந்தாண்டு மூலோபாயத் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. | 100% | 100% |
| | 1.1 விவசாய காணிப் பயன்பாட்டைக் கொண்ட காணிகளுக்கான விவசாயச் செய்கை முகாமைத்துவ முறைமை வகைப்படுத்தல் (Farming System Classification) ஒன்றைத் தயாரித்தல் மற்றும் வகைப்படுத்தல் வரைபடங்களைத் தயாரித்தல் தொடர்பான மூன்று (03) முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்தல். | | | | |
| | 1.2 நிலப்பயன்பாடு / நிலப்போர்வை வகைப்படுத்தல் சுட்டெண் - இலங்கைக்கான பதிவேடு / ஆவணம் தயாரித்தல். | | | 100% | 99% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1.3 2026 – 2030 திணைக்களத்திற்கான ஐந்தாண்டு மூலோபாயத் திட்டம் (Five Year Strategic Plan) ஒன்றைத் தயாரித்தல். | | | 100% | 100% |
| 02 | மாவட்ட மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல். | 6.6295 | 24 மாவட்ட அளவிலான நிலப் பயன்பாட்டுத் திட்டங்களுக்கான தரவு சேகரிப்பு நிறைவடைந்தது ள்ளது | 100% | 99% |
| 03 | தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் செயலமர்வு | 0.402 | தேசிய அளவிலான செயலமர்வு நிறைவடைந்தது ள்ளது. | 100% | 100% |
| 04 | தெரிவு செய்யப்பட்ட உப நீரேந்துப் பகுதிகளுக்கான (Sub River Basin) நிலப்பயன்பாட்டு முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல். | 4.6425 | தேர்ந்தெடுக்கப்பட்ட 07 உபநீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கு 7 காணிப் பயன்பாட்டு முகாமைத்துவ திட்டங்கள் நிறைவடைந்துள் ளன. | 100% | 100% |
| 05 | கிராமிய மற்றும் நுண் நீரேந்துப் பகுதிகளுக்கான காணிப் பயன்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல். | 6.00 | கிராமப்புற மற்றும் நுண் நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கு 100 காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் நிறைவடைந்துள் ளன. | 100% | 99% |
| 06 | மண் மற்றும் நீர் பாதுகாப்பின் ஊடாகக் குறைவான பயன்பாட்டைக் | 19.8 | மண் மற்றும் நீர் பாதுகாப்பு மூலம் 66 உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் | 100% | 99% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொண்ட விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல். | | நிறைவடைந்துள் ளன. | | |
| 07 | அறிவியல் ரீதியிலான காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்துதல். | 1.418 | 333 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நிறைவடைந்துள் ளன. | 100% | 99% |
| 08 | மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக்கூட்டங்களை நடாத்துதல். | 0.318 | 76 குழுக்கள் நிறைவடைந்துள் ளன. | 100% | 98% |
| 09 | பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக்கூட்டங்களை நடாத்துதல். | 1.2 | 448 பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக்கள் நிறைவடைந்துள் ளன. | 100% | 99% |
| 10 | மாவட்ட அலுவலகங்களில் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்தல் | 1.08 | 300 கூட்டங்கள் நிறைவடைந்துள் ளன. | 100% | 96% |
| 11 | பிரதான அலுவலகத்தின் காலாண்டு முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல். | 0.484 | 4 கூட்டங்கள் நிறைவடைந்துள் ளன. | 100% | 96% |

……………………………
பணிப்பாளர் நாயகம்
பெயர்
பதவி
திகதி

# அத்தியாயம் 03 – ஆண்டின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

**2025 டிசெம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

## 3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | 2024 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 576,457,048 | 529,102,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 49,333,669 | 10,730,960 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 21,906,282 | 20,781,845 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 647,697,000 | 560,614,805 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 647,697,000 | 560,614,805 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | | 18,388,083 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 647,697,000 | 542,226,722 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | | | |
| 516,225,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 513,293,463 | 451,555,724 | ஏசீஏ-2(ii) |
| 87,775,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 71,137,719 | 66,574,442 | ஏசீஏ-2(ii) |
| 4,000,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 3,635,241 | 3,961,018 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| 608,000,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 588,066,424 | 522,091,184 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 17,000,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 14,680,871 | 15,022,362 | ஏசீஏ-2(ii) |
| 8,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 8,331,554 | 12,149,282 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 3,000,000 | திறன் விருத்தி | 14 | 2,509,522 | 1,459,077 | ஏசீஏ-2(ii) |
| 44,500,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 43,965,035 | 43,210,929 | ஏசீஏ-2(ii) |
| 73,000,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 69,486,982 | 71,841,650 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 49,498,079 | 10,214,101 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 23,874,525 | 23,339,917 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 73,372,604 | 33,554,018 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ ஏ) | | 730,926,010 | 627,486,852 | |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | (83,229,010) | (85,260,130) | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | 83,229,010 | (85,402,862) | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | - | 142,732 | ஏசீஏ-3 |
| | | | - | (85,260,130) | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 585,143,805 | 548,265,024 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 45,429,799 | 43,461,557 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | 142,732 |
| மொத்த சொத்துக்கள் | | 630,573,604 | 591,869,313 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 45,071,349 | 42,938,698 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 585,143,805 | 548,265,024 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 358,450 | 522,859 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | 142,732 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 630,573,604 | 591,869,313 |

பக்க இலக்கம் ....1... முதல் ...22.. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.'.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ..23. முதல் ..33..... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத் திற்க.ா.க. வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத் திற்க.ா.க. உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் |
|---|---|---|
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | திகதி : 2026/2/23 |
| திகதி : 2026.02.24 | திகதி : 2026/02/23 | |

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Land and Irrigation
"Mihikatha Madura" Land Secretariat,
No. 1200/6, Rajamalwatta Avenue,
Battaramulla.

G.D.S. Gunawardena
Director General
Land Use Policy Planning Department
No: 170, Kirula Road, Narahenpita,
Colombo 05.

ඒ. ඩබ්. කේ. එස්. රණසිංහ
ප්‍රධාන ගණකාධිකාරී
ඉඩම් පරිහරණ ප්‍රතිපත්ති [illegible]
නො. 170, [illegible]
නාරාහේන්පිට, [illegible]

2

## 3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2025 ரூபா | 2024 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 32,718,986 | 25,631,115 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 576,457,048 | 529,102,000 |
| முற்பணங்களை அறவிடல் | 22,477,413 | 22,214,162 |
| வைப்புக்களின் பெறுகை | 49,333,669 | 10,730,960 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 680,987,116 | 576,947,277 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 571,572,813 | 502,831,325 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 3,635,241 | 3,961,018 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு, மூலதன மாற்றங்கள், திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 12,949,832 | 17,928,056 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 12,070,533 | 751,924 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | 18,388,083 |
| முற்பணக் கொடுப்பனவு | 24,850,229 | 23,951,687 |
| வைப்புக் கொடுப்பனவு | 49,498,079 | 10,214,101 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 674,576,727 | 578,025,564 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | 6,410,389 | 9,652,673 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம், கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுகல்கள் | 6,410,389 | 9,509,941 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 6,410,389 | 9,509,941 |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (6,410,389) | (9,509,941) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | 0 | 142,732 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | - | 142,732.00 |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | 142,732.00 |

3

## 3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **தயார்படுத்தலின் நோக்கம்**

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02.'.2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

